17.07.2023
O.S.No.154/2013

வா.சா.1 திரு.செல்வம் த.பெ.சுப்பிரமணியன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு **விசாரணை** தொடர்ச்சி

1. இந்த வழக்கில் 4ம்பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ள துரைப்பாண்டிக்கும் இந்த வழக்கிற்கும் என்ன சம்பந்தம் என்றால் மற்ற பிரதிவாதிகளுடன் சேர்ந்து 4ம் பிரதிவாதியும் எனக்கு தொந்தரவு கொடுத்ததால் அவரை இந்த வழக்கில் நான் கட்சி சேர்த்துள்ளேன். 1ம் பிரதிவாதியின் தந்தை பெயர் என்ன என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. 1ம் பிரதிவாதியின் தந்தைபெயர் மொந்தையன் செம்பன் அம்பலம் என்றால் சரிதான். நெடுங்குளம் கிராம சர்வே எண்.8/3-ல் அடங்கியுள்ள அனைத்து சொத்துக்களையும் மொந்தையன் செம்பன் அம்பலம் தான் உழவடைதாரராக இருந்து விவசாயம் செய்து வந்தார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. 1972-ம் ஆண்டு வெளியிடப்பட்ட தமிழ்நாடு அரசிதழில் மொந்தையன் செம்பன் அம்பலம் தான் மேற்கூறியவாறு உழவடை செய்துவந்தார் என்று பிரசுரிக்கப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி தெரியாது.

2. 1ம் பிரதிவாதியின் தந்தை தான், உழவடை செய்து வந்த சொத்துக்களின் பகுதியை அவர் விவசாயம் செய்தும், பகுதியை வேறு நபர்களுக்கு விட்டு அவர்கள் விவசாயம் செய்து அனுபவத்தில் இருந்து வந்தார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. 1ம்பிரதிவாதியின் தந்தை இறப்பிற்கு பின்பு தாவா சொத்தை 1ம்பிரதிவாதி குத்தகைதாரராக இருந்து விவசாயம் செய்து வருகிறார் என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி இறப்பிற்கு பின்பு அவரது வாரிசுதாரர்கள் தாவா சொத்தில் குத்தகைக்கு இருந்து விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் குறிப்பாக எந்த தேதியில் தாவா சொத்தில் எனது அனுபவத்திற்கு இடையூறு செய்தார்கள் என்றால் 24.09.2012 அன்று இடையூறு செய்தார்கள். தாவா சொத்து எனது அனுபவத்திற்கு வராமல் எவ்வாறு பிரதிவாதிகள் எனது அனுபவத்திற்கு இடையூறு செய்தார்கள் என்றால் தாவா சொத்து எனது அனுபவத்தில் தான் உள்ளது, நான் கிரயம் வாங்கியது முதல் எனக்கு பிரதிவாதிகள் கொலைமிரட்டல் விடுத்து இடையூறு செய்து வருகிறார்கள்.

3. நான் இது சம்பந்தமாக பலமுறை காவல் நிலையத்தில் புகார் அளித்தும் முறையாக விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். தாவா சொத்தில் நான், எந்த காலத்திலும் விவசாயம் செய்யவில்லை என்றால் என்னை அவர்கள் விவசாயம் செய்யவிடவில்லை, அவர்களும் அதில் விவசாயம் செய்யவில்லை. சின்னகருப்பன் தான் அவர்கள் குடும்பத்தில் அதிகம் படித்த நபர் என்றால் தெரியாது. ஆகையால் அவர்களது குடும்ப விசயத்தை அவர் மட்டும்தான் கையாள்வார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. சின்ன கருப்பன் 1ம் பிரதிவாதியிடம் கிரயம் பேசி 9 ஏக்கர் 81 செண்டு நிலத்திற்கு கிரய தொகை கொடுத்து ரசிது பெற்றுள்ளார் என்றால் தெரியாது. இந்த வழக்கில் இடைக்கால உறுத்துக்கட்டளை கோரி இ.ம.எண்.346/2013 என்ற மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான், அந்த மனு எனக்கு எதிராக தள்ளுபடி செய்யப்பட்டது. அதை எதிர்த்து CMA 6/2014 தாக்கல் செய்து அந்த மனுவும்

தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தின் சுவாதீனம் என் வசம் இல்லாததால்தான் மேற்படி மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 1ம்பிரதிவாதியின் வாரிசுதாரர்கள் தான் தற்போது வரை உழவடைதாரராக இருந்து விவசாயம் செய்து வருகிறார்கள் என்றாலும் நான் கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றாலும் சரியல்ல, இந்த வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் தாவா சொத்தின் அனுபவம் என்னிடம் இல்லை என்றால் சரியல்ல.